# 03-09-2023 செய்தி

## ஆதித்யா எல் – 1 ஆய்வுகள் என்னென்ன?

➢ சூரியனில் ஏற்படும் மாற்றங்களை ஆராய்வதற்காக ஆதித்யா எல்-1 விண்கலத்தில் 7 விதமான ஆய்வுக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

➢ அவற்றில் நான்கு கருவிகள் சூரியனின் நேர் எதிர் திசையில் நிலைநிறுத்தப்பட்டு ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

➢ மற்ற மூன்று கருவிகளும் சூரியனில் ஏற்படும் மாற்றங்களால் அதன் புறவெளியில் உருவாகும் அயனித் துகள்களை ஆய்வு செய்யவுள்ளன.

**விஇஎல்சி**

➢ விசிபி எமிஷன் லைன் கொரோனாகிராப் எனப்படும் இந்த கருவி, சூரியனின் வெளிப்புறத்தில் உள்ள கொரோனா பகுதியையும், அதிலிருந்து ஆற்றல் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளும்.

➢ இதன் மூலம் நாளொன்றுக்கு 1,440 புகைப்படங்களை எடுக்க முடியும். இந்தக் கருவியை பெங்களூரில் உள்ள இந்திய விண்வெளி இயற்பியல் ஆய்வு நிறுவனம் இஸ்ரோவுடன் இணைந்து உருவாக்கியுள்ளது.

**எஸ்யூஐடி**

➢ சோலார் அலட்ரா வயலட் இமேஜிங் டெலஸ்கோப் எனப்படும் இந்த கருவி சூரியனின் முதல் இரு அடுக்குகளான போட்டோஸ்பியர், குரோமோஸ்பியரில் இருந்து வெளிவரும் புற ஊதாக கதிர்கள்குறித்தும்,

➢ புற ஊதாக் கதிர்களுக்கு அருகே ஏற்படும் கதிர் வீச்சு மாறுபாடுகள் குறித்தும் ஆய்வுகளை மேற்கொள்ளும். இந்த கருவியை புணேவில் உள்ள விண்வெளி ஆய்வு மற்றும் விண்வெளி இயற்பியலுக்கான மையம் வடிவமைத்துள்ளது.

**சோலேக்ஸ் எஸ் மற்றும் ஹெல் 10 எஸ்**

➢ சூரியினிலிருந்து வெளியேறும் 'எக்ஸ்ரோ' கதிர்களை இந்தக் கருவி ஆய்வு செய்யும். அதே போன்று அந்த கதிர்களின் வாயிலாக உருவாகும் ஆற்றலையும் இதன் மூலம் அறிய முடியும்.

➢ பெங்களூரில் உள்ள யூ.ஆர்.ராவ் செயற்கைக் கோள் மையம் இந்த இருவேறு ஆய்வுக் கருவிகளை தயாரித்துள்ளது.

**ஆஸ்பெக்ஸ் மற்றும் பாபா**

➢ ஆதித்யா சூரிய ஆற்றல் துகள் பரிசோதனை கருவி மற்றும் ஆதித்யா பிளாஸ்மா பகுப்பாய்வு கருவி என அழைக்கப்படும் இவ்விரு கருவிகளும் சூரிய புயல்கள் குறித்தும் அதில் உள்ள ஆற்றல் அயனிகள் குறித்தும் ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளன.

➢ இதில் ஆஸ்பெக்ஸ் கருவியை அகமதாபாதில் உள்ள இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகமும், பாபா என்ற கருவியை திருவனந்தபுரத்தில் உள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி ஆய்வு மையமும் வடிவமைத்துள்ளன.

## நாட்டிலேயே முதல்முறையாக ரூ.128 கோடியில் ராமநாமபுரத்தில் கடற்பாசி பூங்கா

♦ நாட்டிலேயே முதன்முறையாக ராமநாதபுரம் மாவட்த்தில் பல்நோக்கு கடற்பாசி பூங்கா மத்திய மீன்வளத் துறை அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலா, இணை அமைச்சர் எல்.முருகன் ஆகியோர் நேற்று அடிக்கல் நாட்டினர்.

♦ இராமநாதபுரம் மாவட்டம் திருப்பாலைக்குடி அருகேயுள்ள வளமாவூரில், மீன்வளத் துறை சாா்பில் கடற்பாசி பூங்கா அமைக்கப்படவுள்ளது.

♦ இந்தப் பூங்கா மூலம், 6 மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள், மீனவப் பெண்கள் பயனடைவர். இந்தப் பூங்கா கட்டுமானப் பணிகளை 2 ஆண்டுகளுக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

♦ விவசாயிகளைப் போல, மீனவர்களுக்கும் கிஷான் அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## தேங்காய் உற்பத்தியில் இந்தியா முதலிடம்

♦ உலக அளவில் தேங்காய் உற்பத்தியில் இந்தியா முதலிடம் வகித்தாலும், இங்கு அதைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை குறைவாக உள்ளது.

♦ இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் நாடுகளில் அதிக பரப்பளவில் தென்னை பயிரிடப்பட்டாலும், உலக அளவில் தேங்காய் உற்பத்தியல் இந்தியா முதலிடம் வகிக்கிறது. ஆனாலும், இங்கு அதன் பயன்பாடு குறைவாகவே உள்ளது.

**மேக்**

- மேக்னிடோ மீட்டர் என்ற இந்த கருவி, சூரியனுக்கும், பூமிக்கும் இடையே உள்ள எல்1 புள்ளியில் நிலவும் காந்தபுலத்தை அளவிடும் திறன் கொண்டது.
- இதை பெங்களூரில் உள்ள எலக்ட்ரோ ஆப்டிக்ஸ் சிஸ்டம் ஆய்வகம் உருவாக்கியுள்ளது.

**லாக்ராஞ்சியன் புள்ளி என்றால் .......**

- விண்ணில் சுற்றி வரும் கோள்களுக்கு இடையேயான ஈர்ப்பு விசை மற்றும் மைய விலக்கு விசை 5 இடங்களில் சமமாக இருக்கும்.
- இதை லாக்ராஞ்சியன் புள்ளி என்று அறிவியல் உலகம் அழைக்கிறது. அதன்படி, சூரியன், பூமிக்கு இடையே 5 லாக்ராஞ்சியன் புள்ளிகள் (எல் புள்ளிகள்) உள்ளன.
- அந்த இடங்களில் குறைவான எரிபொருளை பயன்படுத்தி விண்கலத்தை சமநிலையில் வைத்திருக்க முடியும்.
- அதன்படி, பூமியின் முன்புறத்தில் இருந்து 15 லட்சம் கி.மீ தொலைவில் உள்ள எல்-1 புள்ளிக்கு அருகேதான் ஆதித்யா விண்கலம் நிலைநிறுத்தப்படவுள்ளது.
- இங்கிருந்து கிரகண காலத்திலும் சூரியனை தொடர்ந்து கண்காணிக்க முடியும். இந்த புள்ளி கோள்களின் சுழற்சிக்கு ஏற்ப 23 நாள்களுக்கு ஒருமுறை மாறும். இதனால் இந்த இடத்திலிருந்து இயங்கும் விண்கலமும் தனது நிலையை மாற்றிக் கொண்டே இருக்க வேண்டும்.

## சூரியனின் வெளிப்புறப் பகுதியை ஆராய்வதற்காக வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது ஆதித்யா எல் – 1

- பிஎஸ்எல்வி சி-57 ராக்கெட் மூலம் செலுத்தப்பட்ட இந்த விண்கலன், 4 மாதப் பயணத்துக்குப் பின்னர் புவியில் இருந்து 15 லட்சம் கிலோமீட்டர் தொலைவில் உள்ள பகுதியை சென்றடையும்.
- சூரியனின் வெளிப்புறப் பகுதியை ஆராய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள ஆதித்யா எல் 1 விண்கலம், பிஎஸ்எல்வி 57 ராக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.
- மனிதர்களின் எதிர்கால வாழ்வுச் சூழலுக்கு சூரியக் குடும்பம் குறித்த ஆய்வுகள் முக்கியமானவையாகும்.
- ஏனெனில், பூமி உள்ளிட்ட அனைத்து கோள்களின் பரிமாணங்களையும் சூரியன்தான் நிர்வகிக்கிறது. சூரியனின் மாற்றங்களை அறிய அதன் நிகழ்வுகள் பற்றிய புரிதல் அவசியம்.
- குறிப்பால் பூமியை நோக்கி வரும் சூரியப்புயல்கள் குறித்து அறிந்து கொள்ளவும், அவற்றின் தாக்கத்தைக் கணிக்கவும் சூரியன் குறித்த ஆய்வுகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும்.
- பூமியில் இருந்து 15 கோடி கிலோமீட்டர் தொலைவில் உள்ள சூரியனை ஆய்வுசெய்ய இஸ்ரோ 2008 ஜனவரியில் ஆதித்யா-1 என்ற திட்டத்தை அறிவித்தது.
- சூரியனின் வெப்பம் மிகுந்த கரோனா மண்டலத்தையும், பூமியில் இருந்து 15 லட்சம் கிமீ தொலைவில் உள்ள லாக்ராஞ்சியன் பாயின்ட் ஒன் (Lagrangian Point One) என்ற பகுதியில் இருந்து பார்க்கும் போது, துல்லியமாக ஆய்வு செய்ய முடியும் என்று விஞ்ஞானிகள் கருதினர்.
- சூரிய ஆய்வுக்காக இந்தியா அனுப்பும் முதல் விண்கலமான ஆதித்யா எல் -1 சுமார் 1,475 கிலோ எடை கொண்டது. எரிபொருள் இருப்பைப் பொறுத்து இதன் ஆயுட்காலம் 5 ஆண்டுகள் வரை நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த திட்டம் வெற்றி பெற்றால், இந்தியா அந்த வரிசையில் 4-ஆவது இடத்தை பிடிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.
- சூரியனின் இருந்த வரும் காந்தப் புயல், நமது செயற்கைக்கோள்கள், தொலைத் தொடர்புக் கூட்டமைப்புகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.
- இதைத் தவிர்க்க விண்வெளி வானிலையில் காந்தப்புயல் குறித்த முன்னெச்சரிக்கை அறிவிப்பு தேவைப்படும். அதை ஆதித்யா விண்கலம் நமக்கு வழங்கும். இந்த திட்டத்துக்கான இஸ்ரோ ரூ.350 கோடி செலவிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.